16th July 1962]

(இ) அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) &
(இ) No representation has been received by Government on the subject.

The Public Health Board which considered the suggestion of one of its members for the provincialisation of the local board health services resolved that the question be deferred for consideration to a later date after watching the arrangements now in operation. The question of Government taking action did not therefore arise.

* 328 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா——

(அ) பொது சுகாதார இலாகா சிப்பந்திகளைத் தனித்து இயங்கி வரும் பொது சுகாதார இலாகாவின்கீழ் கொண்டுவராமல் தனித்தனியாகப் பிரிந்து இருப்பதால் மேற்படி இலாகா வேலைகள் பாதிக்கப்படுவது உண்மையா ?

(இ) அப்படியானால், அதைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவை ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) &
(இ) Presumably the Member refers to the public health establishment under Panchayat Union Councils. If so it is now too early to say whether any difficulty has been experienced as the entire State is covered by Panchayat Union Councils only from 2nd October 1961. No difficulties have been brought to Government's notice so far.

திரு. து. ப. அழகமுத்து : சுகாதார சர்வீசுகளை சாக்கார் மயமாக்க வேண்டுமென்று பப்ளிக் ஹெல்த் போர்டு முடிவு செய்தும், ஸ்ரீ டி. புருஷோத்தமன், எம். எல். சி. அவர்கள் அதைப்பற்றி சிபாரிசு செய்ததன் பேரிலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்கள் கொண்டு வந்தது உண்மைதான். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறப் பட்டுவிட்டது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தொத்து வியாதிகளைப் போக்கு வது அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு திட்டம் என்று ஒத்துக்கொண்டிருப்பதால் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் சர்வீஸ்களையாயினும் ஸ்டேட் சர்வீஸ் என்று கருதி, அந்த அளவுக்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிக் குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே சானிடரி இன்ஸ் பெக்டர்கள், ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் முதலியவர்கள் எல்லாம், பஞ்சாயத்து யூனியன் பொறுத்த மட்டில் இருக்கின்ற உத்தியோகஸ்தர் கள் போல், முனிசிபல் கமிஷனர் ஆட்சியின்கீழ் வருகிறார்கள். அப்படி கொஞ்சம் பேர்கள் சானிடரி இன்ஸ்பெக்டர்கள், ஹெல்த் இன்ஸ் பெக்டர்கள் ப்ரமோஷன் பெற்றிருக்கிறார்கள்.

கள்ள நோட்டுகள்.

* 329 கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆந்திராவில் நூறு ரூபாய் கள்ள நோட்டுகள் அச்சடித்து இதர ராஜ்யங்களுக்கு வந்திருப்பதாக டில்லி போலீசார் நம் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்களா ?

(இ) அப்படியானால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No Sir.

(இ) Does not arise.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், ஆந்திராவில் 100 ரூபாய் கள்ள நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுவதாக பத்திரிகைகளில் பார்த்தேன். ஆனால் டில்லி போலீஸார் நம் சர்க்காருக்கு அம்மாதிரி தெரிவிக்க வில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆந்திராவிலிருந்து கள்ள நோட்டுகள் நம்முடைய ராஜ்யத்திற்கு வந்து நம்முடைய போலீஸ்காரர்கள் அதைக் கண்டுபிடித்திருக்கிறார்களா ? அப்படி கண்டுபிடித்து, அதன் மீது எதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்திற்கு அப்படிப் பட்ட ஒரு தகவலும் இல்லை. ஆகையால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பல கலைகளுக்கு உறைவிடமாக இருக்கக் கூடிய தமிழ் நாட்டில் கள்ள நோட்டுகள் சமீப காலமாக அச்சடிப்பது பிரத்தியேகமாக பிரக்யாதி பெற்று வருகிறதே, அதற்கு எதாவது போதிய காரணங்கள் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கலையைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து விமர்சனம் செய்யக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை. ஆனால் கனம் அங்கத்தினர் எதாவது சொன்னால் அதைக் கேட்டு தெரிந்து கொள்கிறேன்.

சித்த, ஆயுர்வேத வைத்திய முறைகள் (அங்கீகாரம்.)

* 330 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சித்த வைத்திய முறையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா ?

(இ) சித்த வைத்தியர்கள் பணியாற்றுதவற்கு ரிஜிஸ்டரேஷன் முறை உண்டா ?

(உ) ரிஜிஸ்டர் செய்துகொள்வதற்குரிய நடைமுறைகள் என்னென்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) & (இ) Yes, Sir.

(உ) Siddha Practitioners are registered by the Central Board of Indigenous Medicine as per the rules framed for the purpose.

* 331 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சித்தவைத்திய, ஆயுர்வேத வைத்திய நூல்களை ஆராய்ச்சி செய்யவும், அம் முறைகள் ஒரு சீராகப் பின்பற்றப்படுவதற்கும் ஏதேனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

(இ) விவரமென்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) Yes, Sir. Four books in Ayurveda and five books in Siddha were written and published by the literary research wing of the former College of Indigenous Medicine. A Hospital Pharmacopeia in Ayurveda, Siddha and Unani Systems of Medicine was also brought out.